**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 40/2015**

**Deposition of P.W.4**

Name : திரு. டாக்டர். ராஜேஷ்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:28.01.2026

Accused Present

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது கன்னியகுமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.09.2005ம் தேதியன்று தக்கலை மதுவிலக்கு பிரிவு குற்ற எண்.712/2003 வழக்கின் கைப்பற்றப்பட்ட மாதிரி திரவத்தில் ஈத்தேல் ஆல்கஹாலுடன் சேர்ந்து அட்ரோபின் இருந்ததாக வட்டார தடய அறிவியல் ஆய்வகம் திருநெல்வேலியிலிருந்து ஆய்வு அறிக்கை வந்துள்ளதாகவும், அட்ரோபின் கலந்த ஈத்தேன் ஆல்கஹாலை ஒரு நபர் உட்கொண்டால் அவருக்கு என்ன விளைவுகள் ஏற்படும் என்று காவல் ஆய்வாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் 4.6 மில்லி கிராம் சதவீத அளவு அட்ரோபின் கலந்த ஈத்தேல் ஆல்கஹாலை ஒரு நபர் உட்கொண்டால் அவருடைய வாய் உலர்ந்து போகும், கண்பார்வை

மங்கலாகும், கண் கூசும், கண் வெண்விழிப்படலம் சிவக்கும், உணவு உட்கொள்ள கடினமாக இருக்கும், நெஞ்சு படபடப்பு ஏற்படும். மேலும், ரத்தத்தில் அட்ரோபினின் அளவு 30–லிருந்து 150 மில்லி கிராம் கூடுதலாக இருக்கும் போது உயிருக்கும் ஆபத்தாக அமையலாம் என்று கருத்து கூறி சான்று வழங்கினேன். அந்த சான்று அ.சா.ஆ.2. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மது கஷாயத்தில் எத்தனை சதவீத அட்ரோபின் இருந்தது என்று கருத்து கேட்கவில்லை என்றால் சரிதான்.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 40/2015**

**Deposition of P.W.** 5

Name : திரு. இராஜாராம்.

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 28.01.2026

Accused Present.

முதல் விசாரணை–

நான் தற்போது பணக்குடி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தக்கலை மது விலக்கு அமல் பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 23.10.2003ம் தேதி பகல் 11.15 மணிக்கு திக்கணங்கோடு சந்திப்பில் நானும், காவலர்கள் திரு.இன்பராஜ், திரு. குணராஜ் ஆகியவர்களுமாக வாகனத்தணிக்கையில் ஈடுபட்ட போது வடக்கிலிருந்து – தெற்கு நோக்கி வந்த TN 74 Z 2778 என்ற சிவப்பு கலர் ஸ்கூட்டரை நிறுத்தி சோதனையிட அதில் முன்பக்கத்தில் அமர்ந்திருந்த பின்னால் பெயர். விலாசம் கேட்டு தெரிந்த செல்லம் மகன் கண்ணன் மற்றும் அதற்கு பின்பு சுந்தர்ராஜ் மகன் ஜெகன் ஆகியவர்கள் என்பது தெரியவந்தது. ஸ்கூட்டரின் முன்பகுதியில் ஒரு

சாக்குமூட்டையும், பின்பகுதியில் ஒரு சாக்குமூட்டையும் காணப்பட்டது. அதை திறந்து பார்த்த போது அதில் எவ்வித அனுமதியும் இல்லாமல் சாக்குமூடையில் தலா 125 வீதம் 250 பாக்கெட் மது கஷாயம் காணப்பட்டது. எவ்வித அனுமதியும் இல்லாமல் மதுகஷாயத்தை வாகனத்தில் கொண்டு சென்ற குற்றத்திற்காக மேற்படி நபர்களை கைது செய்து சம்பவ இடத்தில் வைத்து காணப்பட்ட மதுகஷாயத்திலிருந்து 500 எம்.எல் பிடிக்கக்கூடிய 4 பாட்டில்கள் எடுத்து மூடி சீல் வைத்து மீதமுள்ள மதுகஷாயத்தை சம்பவ இடத்தில் கொட்டி அழித்து விட்டோம். மேற்படி மாதிரிக்காக எடுக்கப்பட்ட மதுகஷாயத்தையும், ஸ்கூட்டரையும் அத்தாட்சியில் தயார் செய்து பொது மக்கள் யாரும் சாட்சிகளாக முன்வராததால் போலீசாரிடம் சாட்சி கையொப்பம் பெற்று எதிரி மற்றும் பொருட்களுடன் நிலையம் வந்து 14.00 மணிக்கு குற்ற எண். 712/2003 பிரிவு 10(1) தமிழ்நாடு மதுபான தயாரிப்பு மற்றும் கட்டுபாட்டு விதிகளின் படியும் பிரிவு 11, 4 (1), (a,a,a) மற்றும் 14 (A) TNP Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

திக்கணங்கோடு சந்திப்பு ஆள் நடமாடும் பகுதி என்றால் சரிதான். மதுவிலக்கு சட்டப்படி பொருட்களை கைப்பற்றும் போது காவல் ஆய்வாளர் படிநிலைக்கு குறையாத நபர் பொருட்களை கைப்பற்ற வேண்டுமென்றால் சரியல்ல. நாங்கள் கைப்பற்றிய மதுகஷாயம் சாக்குமூட்டைக்குள் பாக்கெட்டுகளாக இருந்தது என்றால் சரிதான். அத்தாட்சியில் 250 பாட்டில்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதுகஷாயம்

எங்கு தயாரிக்கப்பட்டு எங்கு பாக்கெட்டுகளில்அடைக்கப்பட்டது என்று வழக்கு பதிவு செய்யும் போது எனக்குத் தெரியாது.  நாங்கள் கைப்பற்றிய மதுகஷாயம் ஆயூர்வேத தயாரிப்பு என்று சொன்னால் சரியல்ல. மதுகஷாயத்தால் பாதிக்கப்பட்டதாக புகார் எதுவும் வரவில்லை.  எதிரிகளை சொன்ன நேரத்தில், கைது செய்யவில்லை என்றும், அவர்களிடமிருந்து எவ்வித பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. முதல்தகவ்ல் அறிக்கை சொன்ன நேரத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்று சொன்னால்சரியல்ல.